**சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டம் - 2021**

சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 28 ஆம் திகதிய 5915–எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் ஐஐ பீ (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏறபாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், நிதி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்படுத்தல் முகவராக உள்ளது. இலங்கையிலுள்ள வறுமை மற்றும் பாதிப்பிற்குள்ளான குழுக்களின் நலன்களிற்காக சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் மேம்படுத்தப்பட்ட சமத்துவம், வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றிற்கு பங்களிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்ட செயற்பாடுகள் 03 கூறுகளைக் கொண்டிருந்தது. நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,212.50 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 75 மில்லியன் தொகையானதுடன் செயற்திட்டத்தின் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 யூன் 30 அளவில் பூரத்திசெய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தினை பூர்த்திசெய்வதற்கான திகதியை 2023 யூன் 30 வரை நீடிக்கப்பட்டது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆம் திகதிய 5 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | செயற்திட்டம் நிதியமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்படவில்லை. | நாங்கள் ஏற்கனவே இரு கடிதங்கள் மூலம் உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு நினைவூட்டினோம். | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்கள் மற்றும் நிதிப்பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01.˙.2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் வழிகாட்டல் குழு கூட்டம் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 01 வழிகாட்டல் குழு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட கொவிட் நிலைமை காரணமாக வழிகாட்டல் குழு கூட்டத்தை நடாத்த முடியவில்லை. நாங்கள் விரைவாக பிஎஸ்சி கூட்டத்தை நடாத்துவதற்கு திட்டமிடுகின்றோம். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

பின்வரும் பெயரிலான 03 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படுகின்றன.

(அ) ஒருங்கிணைந்த சமூக பதிவேடொன்றை கட்டியெழுப்புதல்
(ஆ) ஒன்றிணைந்த சேவை வழங்கல் முறைமையினை அறிமுகம் செய்தல் மற்றும்
(இ) செயற்திட்ட அமுல்படுத்தல் மேற்பார்வை மற்றும் திட்டமிடல் என்பவற்றுக்கான ஆதரவளித்தல்

பல்வேறு சமூக நல நிகழ்ச்சித்திட்டங்களினால் ஆதரிக்கப்படும் குடும்பங்களினை தெரிவு செய்வதற்கும் முகாமை செய்வதற்கும் முன்னேற்றுவதற்கும் பயனுறுதிமிக்கதும் வெளிப்படையானதுமான பொறிமுறையியனை உருவாக்குவதன் ஊடாக இலங்கையில் சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களுடன் சமத்துவம், வினைத்திறன், வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்துவதே செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். கிடைக்கப்பெற்ற தகவலின் படி குடும்பங்களினை தெரிவு செய்தல், முகாமை செய்தல், முன்னேற்றுதல் என்பவற்றுக்காக பயனுறுதிமிக்கதும் வெளிப்படையான பொறிமுறைகளும் செயற்திட்டத்தின் இறுதியில் இதுவரை உருவாக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் திருப்தியற்ற மட்டத்தில் காணப்பட்டது. அதன் காரணமாக, ஐ.அ.டொலர் 75 மில்லியன் பெறுமதியான மொத்த ஒதுக்கீட்டில் ஐ.அ.டொலர் 07 மில்லியன் தொகை மாத்திரமே 2019 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் பின்னர் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையை கருத்திற்கொண்டு தொற்றுநோய் நிலைமைக்கு உதவுவதற்காக செயற்திட்டத்தினை மீள்கட்டமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் வேண்டியது. அதன்படி, செயற்திட்டம் மீள்கட்டமைக்கப்பட்டு பெறப்பட்ட கடன் மிகுதியில் ரூபா 45 மில்லியன் தொகை 2020 ஆம் ஆண்டின் போது விடுவிக்கப்பட்டது. எனினும், வட்டிக்கட்டணங்களாக ரூபா 436.02 மில்லியனும் பொறுப்புக் கட்டணங்களாக ரூபா 107.54 மில்லியனும் செயற்திட்த்திற்கு 2021 திசெம்பர் 31 வரை ஏற்பட்டிருந்தது. பினவரும் அவதானிப்புக்கள் அதன்மீது மேற்கொள்ளப்படுகின்றன.

**பௌதீக செயலாற்றல் - கூறு 1 ரூ 2**

| | கூறுகள் | நடவடிக்கைகள் | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | ஒருங்கிணைந்த சமூக பதிவேடொன்றை கட்டியெழுப்புதல் | நலன்புரி நலன்கள் சபையின் ஸ்தாபிப்பு மற்றும் முழுமையான செயற்பாடு | 2017 ஆம் ஆண்டில் நலன்புரி நலன்கள் சபை நிறுவப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்தவாறு அது செயற்படவில்லை | நலன்புரி நலன்கள் சபை நிறுவி முழுமையாக செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நலன்புரி நலன்கள் சபை சுமுகமாக செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு தலைவரை நியமிப்பதற்கும் முக்கிய பதவிநிலைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | நலன்புரி நலன் திட்ட நிகழ்ச்சித்திட்டங் குளுக்கான நுழைவு மற்றும் வெளியேறல் தொடர்பான முறையான கொள்கையொன் றின்றின் அங்கீகாரமும் வெளியீடும். | கணக்காய்வு திகதியான 2021 மார்ச் 23 வரையிலும் புதிய நலன்புரி நலன்கள் திட்டத்திற்காக செயற்திட்டமானது பாராளுமன்றம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களத்திலிருந்து அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் திகதி அளவில் நலன்புரி திட்டங்களின் பிரமாணங்கள் பூர்த்தியாக்கப்படவில்லை. அதன் காரணமாக, டபில்யூபிபி (றுடீடீ) இன் தலைவர் சட்ட வரைஞரின் ஒப்புதலுடன் பிரமாணங்களினை பாராளுமன்றத்திற்கு மீள்சமர்ப்பிப்பதற்கு தீர்மானித்தார். டபில்யூபிபி (றுடீடீ) நியமிக்கப்பட்டவுடன் பிரமாணங்கள் சமர்ப்பிக்கப்படும். | நலன்புரி நலன்கள் திட்டத்தின் வர்த்தமானி அறிவித்தலை அங்கீகரிப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரை தாக்கம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | சமூக பதிவேட்டு தகவல் முறைமை செயல் மற்றும் செயற்பாடு | செயற்திட்டத்தின் காலப்பகுதிக்குள் எஞ்சிய பிரதேச செயலாளர்களின் தரவு சரிபார்ப்பு சந்தேகத்தில் உள்ளது. | 2017 ஆம் ஆண்டில் எஸ்ஆர்ஐஎஸ் நிலைமையை கருத்திற்கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம் குறைந்த வருமான பிரிவினை இலக்காகக் கொண்டு 04 பிரதான நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது | நாட்டில் தற்போது செயற்படுகின்ற அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களையும் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | ஒன்றிணைந்த சேவை வழங்கல் முறைமை | நலன்புரி நலனகள் திட்ட பயனாளிகள் தகுதியான அளவுகோலின் (நடபைடிைடை வைல உசவைநசயை) கீழ் தகைமையை பெற்றுக்கொள் ளுதல் | அமுல்படுத்தல் மற்றும் அளவுகோல் அடிப்படையிலான தெரிவு ஆரம்பிக்கப்பட்டி ருக்கவில்லை. | பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் திகதி அளவில் நலன்புரி திட்டங்களின் பிரமாணங்கள் பூர்த்தியாக்கப்படவில்லை. அதன் காரணமாக, டபில்யூபிபி (றுடீடீ) இன் தலைவர் சட்ட வரைவாளரின் ஒப்புதலுடன் பிமாணங்களினை பாராளுமன்றத்திற்கு மீள்சமர்ப்பிப்பதற்கு தீர்மானித்தார். டபில்யூபிபி (றுடீடீ) நியமிக்கப்பட்டவுடன் பிரமாணங்கள் சமர்ப்பிக்கப்படும். | வர்த்தமானி அறிவித்தலை அங்கீகரிப்பதற்கு பொருத்தமான தரப்பினர் மீது தாக்கம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்- கூறு 03**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கிடைக்கப்பெற்ற தகவலின் படி தற்போதிருக்கும் விரிவரன சமூக பாதுகாப்பு தந்திரோபாயம் மற்றும் இலங்கைக்கான தேசிய பாதுகாப்பு தந்திரோபாயம் என்பவற்றை நடாத்துவதற்கான ஒப்பந்தம் ரூபா 14.1 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2019 சனவரி 22 இல் ஆலோசனை நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டதுடன் 2019 செப்தெம்பர் 01 அளவில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தகவலின் படி கணக்காய்வு திகதியான 2022 மார்ச் 23 ஆம் வரை சம்பந்தப்பட்ட பணிகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 5.64 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | என்டிபி மூலம் அடையாளப்படுத்தப்பட்ட இடைவெளிகளினால் இறுதி மதிப்பீட்டு அறிக்கையின் இறுதியாக்கம் மற்றும் தொற்றுப்பரவல் நிலைமையின் போது கள செயன்முறையில் முகங்கொடுக்கப்பட்ட சிரமங்கள் காரணமாக தாமதங்கள் காணப்பட்டன. | பொறுப்புள்ள தரப்பினரை அறிவூட்டுவதற்கும் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் முன்னேற்ற தந்திரோபாய (புசயனரயவழைெ ளவசயவநபல) வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களினை அமுல்படுத்துவதற்கான ஒப்பந்தம் தனியாள் ஆலோசகர் ஒருவருக்கு ரூபா 2.4 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2020 யூலை 20 ஆம் திகதியில் வழங்கப்பட்டு 2021 யூலை 31 அளவில் பூர்த்தியாக்குவதற்கு திட்டமிடப்பட்டது. கிடைக்கப்பெற்ற தகவலின் படி கணக்காய்வு திகதியான 2022 மார்ச் 23 ஆம் வரை சம்பந்தப்பட்ட பணிகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், மீளாய்வாண்டின் இறுதியில் 1.2 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | கொவிட் தொற்றுநோய் நிலைமையினால் தாக்கல் செய்யப்பட்ட குறிப்பிட்ட கணக்கெடுப்புக்களை நடாத்துவதில் காணப்பட்ட சிரமங்களினால் தாமதம் ஏற்பட்டது. முன்னேற்ற தந்திரோபாய அறிக்கை ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் கொடுப்பனவு அங்கீகாரத்தின் பரிந்துரையை இறுதிக்கட்ட மதிப்பீட்டிற்கு வழங்கப்படும். | ஒப்பந்த உடன்படிக்கையின் தேவைப்பாடுகளிற்கு இணங்க ஆலோசகரை தாக்கம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |